சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.20.01.2026
OS.No.748/2018
PW2 : குமார் (வயது 74 ) த/பெ. கிருஷ்ணன்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**1,2,3 மற்றும் 9 ஆம் பிரதிவாதிகள் தரப்பு கு.வி**

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து சம்மன் எதுவும் வரவில்லை. ஷியாமளாதேவியின் கணவர் பெயர் இளங்கோவன். நான் இளங்கோவனின் மாமா மகன். வாதியின் தகப்பனார் ரொம்ப காலமாக ஏட்டாக இருந்து, பின்னிட்டு இன்ஸ்பெக்டராக ஆனவர் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் ஏட்டாக எத்தனை வருட காலமாக இருந்தார் என்று எனக்கு தெரியாது. காவல் உதவி ஆய்வாளராக 5 வருட காலமாக இருந்தார். காவல் ஆய்வாளராக எத்தனை வருடம் இருந்தார் என்றால் தெரியாது.

ராஜலட்சுமி என்பவருக்கு என்ன உடல்நிலை கோளாறு என்றால் சிறுநீரக கோளாறு. ராஜலட்சுமி ஸ்ரீதேவி வீட்டிற்கு போய்விட்டாரா என்றால் ஸ்ரீதேவி தான் அவரை அழைத்து சென்று அவருடன் வைத்து பராமரித்து வந்தார். சிறுநீரக கோளாறு ஏற்பட்டதில் புத்துார், சுந்தரம் மருத்துவமனையில் ஸ்ரீதேவி தான் ராஜலட்சுமியை சேர்த்து சிகிச்சை அளித்து பராமரித்து வந்தார். ராஜலட்சுமி 2013 ஆம் வருடம் இறந்தார். ராஜலட்சுமி அவரது சொந்த ஊரான உறையூரில் தான் இருந்தார்.

ராஜலட்சுமியின் தகப்பனாருக்கு சுருட்டு தொழிலில் தினக்கூலியாக வேலை பார்த்தார் என்றால் சரிதான். உறையூர், நாச்சியார்பாளையத்தில் உள்ள சுருட்டு கம்பெனியில் வேலை பார்த்தார். ராஜலட்சுமியின் தகப்பனார் சுருட்டு கம்பெனி வைத்திருந்தாரா என்றால் இல்லை, தினக்கூலியாக தான் வேலை பார்த்தார். யுனிகா சுருட்டு கம்பெனி உறையூரில் வைத்திருந்தாரா என்றால் இல்லை. நான் கூறுவது தவறு என்றும் ராஜலட்சுமியின் தகப்பனார் சுருட்டுகம்பெனி வைத்திருந்து அதில் 30 3 நபர்கள் வேலை பார்த்து வந்தார்கள் என்றால் சரியல்ல, அவர் தினக்கூலியாக தான்

வேலை பார்த்து வந்தார். ராஜலட்சுமிக்கு மேற்படி சுருட்டு கம்பெனியை கொடுத்தார் என்றால் சரியல்ல. ராஜலட்சுமி மேற்படி கம்பெனியில் வந்த வருமானத்தை வைத்து பொருள் ஈட்டி சொத்துக்களை வாங்கினார் என்றால் சரியல்ல. ராஜலட்சுமி வைத்துள்ள சொத்துக்கள் அனைத்தும் அவ்வாறு சம்பாதித்த சொத்துக்கள் என்றால் சரியல்ல. அனைத்து சொத்துக்களும் ராஜலட்சுமியின் கணவர் சம்பாதித்த சொத்துக்களின் மூலம் வாங்கப்பட்டது.

ராஜலட்சுமியின் கணவர் எவ்வளவு சேமித்து வைத்திருந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. ராஜலட்சுமியின் கணவர் ரொம்ப காலமாக ஏட்டாக இருந்தும் பின்னிட்டு கடைசி காலத்தில் காவல் ஆய்வாளராக இருந்து பணி ஓய்வு பெற்றார் என்பதால், அவரிடம் சொத்து வாங்கும் அளவிற்கு வசதி வாய்ப்புகள் இல்லை என்றால் சரியல்ல. ராஜலட்சுமியின் கணவரின் சேமிப்பு கணக்கை இதுவரை நான் பார்த்ததில்லை. சாட்சி தானாக முன்வந்து ராஜலட்சுமியின் கணவரை நான் பார்த்தபோது அவர் என்னிடம் நேரில் சொத்துக்களை அவரது சம்பாத்தியத்தில் வாங்கியதாக என்னிடம் சொல்லியுள்ளார்.

ராஜலட்சுமியின் கணவர் அரசு உத்தியோகத்தில் இருந்ததால், சொத்துக்களை வாங்கும்போது, அரசாங்கத்தில் கணக்கு காட்டவேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பல கோடி மதிப்புள்ள சொத்துக்களான கீழவாளாடியில் நிலங்களையும், நம்பர் 1 டோல்கேட் ஆனந்தா நகரில் ஒரு வீடும் வாங்கியதாக என்னிடம் கூறியுள்ளார். ராஜலட்சுமியின் கணவர் வருமான வரி துறையில் வருமான வரி செலுத்திய விவரமும் , சொத்துக்கள் வாங்குவதற்காக அனுமதி பெற்ற விவரமும் தெரியுமா என்றால் தெரியாது.

நான் கூறுவது போல், ராஜலட்சுமியின் கணவர் சொத்துக்கள் எதுவும் வாங்கவில்லை என்றும், வாங்கிய சொத்துக்கள் அனைத்தும் ராஜலட்சுமியின் சொத்துக்கள் தான் என்றால் சரியல்ல. ராஜலட்சுமியின் கணவர் 2006 ஆம் வருடம் சாலை விபத்தில் இறந்துவிட்டார். சாலை விபத்திற்கான இழப்பீடு தொகையை

வாங்கினார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. ராஜலட்சுமியின் கணவரின் ஓய்வூதிய கணக்கு புத்தகத்தை தாக்கல் செய்துள்ளார் என்றும் நான் அதை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ராஜலட்சுமியின் கணவருக்கு போலிஸ் உத்தியோகத்தை தவிர வேறு உத்தியோகம் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

நான் வாதியின் கணவருக்கு மாமன் மகனாக இருப்பதால், வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் மற்றபடி எனக்கு உண்மை விவரங்கள் தெரியாது என்றால் சரியல்ல.

<u>13,14,17 ஆம் பிரதிவாதிகள் தரப்பு கு.வி</u> - மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ signed/
குமார்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA
Digitally signed by R.MOHANA
Date: 2026.01.20 16:42:09 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி